Registered as a Newspaper
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 311
புதன்கிழமை
02 ஒக்ரோபர் 2024
புரட்டாதி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055
புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"உந்த கொலஷிப் எக்ஸாம் பேப்பர் பிரச்சினைக்கே முடிவெடுக்க முடியாதவை நாட்டை எப்பிடி மாத்துவினம்?"

தமிழ்க்கட்சிகள்

# புதிய திசையைத் தீர்மானிக்க ஒன்றிணைய வேண்டும்

## யாழ்ப்பாண மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 2**

**தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்துபோகக்கூடிய ஆபத்து அண்மித்துள்ள இவ்வேளையில் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளைத் தீர்மானிக்கவேண்டும் என்று யாழ்ப்பாண மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.**

15

## மக்கள் பிரதிநிதிகளின் சலுகை பற்றி மீளாய்வு

### 3 பேர் குழு நியமிப்பு

கொழும்பு, ஒக். 2
நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் ஆகியோரின் கொடுப்பனவுகள், இதர சலுகைகள் பற்றி ஆராய்வதற்கு மூன்று பேர் கொண்ட குழுவை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

15




## காணாமலாக்கப்பட்ட குழந்தைகள் எங்கே?

### தமிழர் தாயகத்தில் நேற்று பரவலாகப் போராட்டம்!

கிளிநொச்சி, ஒக். 2
காணாமலாக்கப்பட்ட தமது குழந்தைகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15

## தேசிய இனப்பிரச்சினையில் திருப்பங்கள் நிகழவேண்டும்

### ஜனாதிபதியிடம் சிறீதரன் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 2
தங்களின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மதிக்கப்படுவதுடன், தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான திருப்பங்கள் நிகழும் காலமாக அமையவேண்டும் என்று ஜனாதிபதி அநுரவிடம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

15

## ஐந்தாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு

### ஒக்ரோபர் ஏழாம் திகதி யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வு வரிசையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சர்வதேச ஆய்வரங்கின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தனது ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கவுள்ளது. ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி காலை 9 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. (விரிவு: பக்.06)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அரசமைப்பு உருவாகும்

### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 2
இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

15



## ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஒக். 2
இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நாளைமறுதினம் இலங்கைக்கு வரவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்

15

புலமைப்பரிசில் பரீட்சை

## வினாத்தாள் மதிப்பீட்டை நிறுத்துமாறு உத்தரவு!

### விசாரணைக்கும் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 2
ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப் பணியை உடனடியாக நிறுத்தி, முறையான விசாரணைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார் என்று

15



## காற்றாலை வேண்டாம்

### அநுரவுக்கு பறக்கும் கடிதங்கள்

மன்னார், ஒக். 2
மன்னார்த் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயற்பாடுகளை நிறுத்தக்கோரி

15

மது ஒழிப்பு தினம்

## மதுபானசாலைகள் நாளை பூட்டப்படும்

கொழும்பு, ஒக். 2
உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படவுள்ளதாக மதுவரித்

15

## பழைய பேருந்து நிலையம் இடிக்கப்படுகிறது வவுனியாவில்!

### வாகனத்தரிப்பிடம் அமைக்க நடவடிக்கை!

வவுனியா, ஒக். 2
வவுனியா பழைய பேருந்துநிலையப் பகுதியில் அமைந்துள்ள பயன்பாடற்ற கட்டடங்கள் நகரசபையால் இடித்து அகற்றப்பட்டதுடன் அந்த இடத்தில் வாகனத்தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனஅழுத்த கல்விமுறையை நீக்குவதே மறுமலர்ச்சி

*ஜனாதிபதி தெரிவிப்பு*



**கொழும்பு, ஒக். 2**

**சிறுவர்களின் உள, சமூக வளர்ச்சியைத் தடுக்கும் காரணிகள் மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையிலான கல்வி முறைமையிலிருந்து தற்போதைய இளம் தலைமுறையினரை விடுவிப்பதே, மறுமலர்ச்சிக் காலப் பணியின் இலக்காகும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின வாழ்த்துச் செய்தியில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களுக்கே உரித்தான குழந்தைப் பருவ உலகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மனித நேயம், பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்குத் தேவையான அரசியல் மாற்றத்தை முன்னெடுப்பதற்கும், சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் தாம் முன்னுரிமையளிக்கப்படும்.

அத்துடன், சிரேஷ்ட பிரஜைகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் சுதந்திரத்துக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளேன். ஓய்வூதியப் பலன்களை மேம்படுத்துவதற்கும், இலவச மருத்துவ சேவைகளை உறுதி செய்வதற்கும் எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)



# அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக். 2

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள், பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# தகுதியுள்ளவர்களை தெரிவுசெய்யுங்கள்

*கருஜயசூரிய தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 2

எதிர்வரும் பொதுத்தேர்தலில் 'கௌரவ' நாடாளுமன்ற உறுப்பினர் என அழைப்பதற்குத் தகுதிவாய்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்து, அவர்களைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்வது நாட்டுமக்களின் கடமையாகும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

உண்மையான தலைமைத்துவம் என்பது வெறுமனே சொற்களிலன்றி, செயல்களில் தென்படவேண்டும். நல்லாட்சி என்பது ஆடம்பரமல்ல, மாறாக அது அத்தியாவசியமானதொன்று.

எமது நாட்டில் பொதுமக்களின் தேவைகளுக்கு அப்பால் ஊழல் மோசடிகளும், நிர்வாக முறைகேடுகளும் பெருகியிருப்பதை மிகுந்த கவலையுடன் பார்க்கிறேன். இவற்றை சீரமைத்து, ஜனநாயகத்தை ஊக்குக்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் தகுதிவாய்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்து, தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வது நாட்டுமக்களின் கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)




# ஐ.எம்.எப். உயர்மட்டக்குழு இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஒக். 2

சர்வதேச நாணயநிதியத்தின் உயர்மட்ட உத்தியோகபூர்வ குழுவொன்று இன்று புதன்கிழமை முதல் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய பசுபிக் துறையின் இயக்குநர் கிருஷ்ணா சீனிவாசன் தலைமையிலான குறித்த குழுவே வருகை தரவுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சர்வதேச நாணயநிதிய குழு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஏனைய அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக சர்வதேச நாணயநிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் சர்வதேச நாணயநிதியத்தின் பொருளாதார வேலைத்திட்டம் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# புதிய கட்சிகளுடன் கூட்டணி இல்லை

*ஐ.ம. கூட்டணி அறிவிப்பு*

கொழும்பு, ஒக். 2

ஐக்கிய மக்கள் கூட்டணியில் புதிய கட்சிகள் எதுவும் பங்காளிக் கட்சியாக இணைத்துக் கொள்ளப்படமாட்டாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கிங்ஸ் நெல்தசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தனக்கு ஆதரவளித்த 28 கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதென கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார். எனவே, கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டிருந்தாலும் புதிதாக எந்தவொரு கட்சியும் கூட்டணியில் இணைத்துக்கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஒரு வேட்பாளரே பட்ஜெட் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 2

ஜனாதிபதித் தேர்தல் 2024இல் போட்டியிட்ட ஒரு சுயேச்சை வேட்பாளர் மட்டுமே தனது பிரசார நிதியை வெளிப்படுத்தியுள்ளார்.

தேர்தல், செலவுகளை அறிவிப்பதற்கான 21 நாள்களில் 9 நாள்கள் நேற்றுமுன்தினத்துடன்முடிவடைந்துள்ளன. இதுவரை ஒருவரைத் தவிர வேறெந்தக் கட்சியும் தங்கள் தேர்தல் செலவுகளை வெளியிடவில்லை.

கண்ணாடி சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர் எம். பிரேமசிறி மானகே மாத்திரமே தமது செலவுகளை அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# தேர்தலில் போட்டியிடவில்லை புதியவர்களுக்கு வழிவிடுகிறேன்

*சார்ள்ஸ் நிர்மலநாதன் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 2

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்ற நோக்கத்துக்காக இம்முறை நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்பதை அறியத் தருகிறேன் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது முகநூல் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அன்று தொடக்கம் இன்று வரை என்னால் முடிந்த அளவு தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்திருக்கிறேன். வன்னி மாவட்டத்தில் தேவையான என்னால் முடிந்த பல அபிவிருத்தி திட்டங்களையும் நான் முன்னெடுத்துள்ளேன்.

இம்முறை புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்ற நோக்கத்துக்காக நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை. தமிழர்களின் உரிமைக்காக தொடர்ச்சியாக நான் உழைத்துக் கொண்டிருப்பேன் என்றுள்ளார். (ச-56)

# அமைச்சரவை பேச்சாளராக விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 2

அமைச்சரவைப் பேச்சாளராக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் விஜித ஹேரத்தை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. புதிய ஆட்சியின் முதலாவது அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் கூடியது.

இதன்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - இலங்கை திட்டங்கள் பொதுத்தேர்தலின் பின் மீளாய்வு

## அரசாங்கம் தீர்மானம்

**கொழும்பு, ஒக். 2**

**அதானி குழுமத்தின் காற்றாலை மின்திட்டம் உட்பட அனைத்து இந்தியா - இலங்கை இணைப்புத் திட்டங்கள் குறித்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீள ஆராயவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

வடக்கில் அதானி குழுமத்தின் மின்சக்தித் திட்டம் உட்பட இந்தியாவுடன் இலங்கையை இணைக்கும் அனைத்து திட்டங்கள் குறித்தும் மீளாய்வு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுத்தேர்தலின் பின்னர் புதிய நாடாளுமன்றம் அமைந்ததும் இந்தியாவுடனான திட்டங்கள் குறித்து அரசாங்கம் இறுதிமுடிவு எடுக்கும்.

அந்தத் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்த மதிப்பீடுகளுக்காக இந்த மறு ஆய்வு இடம்பெறுகின்றது. பொதுத்தேர்தலின் பின்னரே அந்த திட்டங்களை முன்னெடுப்பதா? அல்லது ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் மாற்றங்களை மேற்கொள்வதா? அல்லது நாங்கள் முன்வைக்கும் விடயங்களுடன் புதிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா? என்பது குறித்து அரசு தீர்மானிக்கும் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

# குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு புதிய அதிகாரி

கொழும்பு, ஒக். 2

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகமாக கடமையாற்றிய ஹர்ஷ இலுக்பிட்டிய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவரை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது பொதுப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி பி. எம். டி. நிலுஷா பாலசூரியவை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலத்திரனியல் விசா நடைமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்காக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய உயர்நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இணைய வங்கிமுறையில் கடவுச்சொல்லைப் பாதுகாக்கவும்

கொழும்பு, ஒக். 2

இணையத்தைப் பயன்படுத்தி ஒன்லைன் வங்கி பரிவர்த்தனைகளில் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் ஒரு முறை கடவுச்சொல் கசிவு மூலம் பண மோசடிகள் நடைபெறுவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. வாடிக்கையாளரை அடையாளம் காணவும், பரிவர்த்தனையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அந்தந்த வங்கி நிறுவனத்தால் வாடிக்கையாளர்களுக்கு ஒரு குறியீட்டு எண் வழங்கப்படுகிறது.

இவ்வாறான குறியீட்டு எண் சமூக ஊடகங்களில் சில வாடிக்கையாளர்களால் பிரபலமான நிறுவனங்கள் மற்றும் சேவைகள் என சமூக போலி விளம்பரங்களைப் பெற பயன்படுத்தப்படுகிறது.

இது போலி வலைப்பக்கங்களுக்கு மக்களின் தனிப்பட்ட தகவல்களை வழங்க வழிவகுக்கிறது. இந்த மோசடிச் செயல்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)



# ஒட்டோக் கட்டணம் குறைக்கப்படாது!

கொழும்பு, ஒக். 2

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும் முச்சக்கரவண்டிக் கட்டணத்தை குறைக்க முடியாதென முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் சங்கங்கள் தெரிவித்துள்ளன. மாதாந்த விலைத் திருத்தத்தின் பிரகாரம் எரிபொருளின் விலைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டன.

எனினும் பெற்றோலின் விலை 300 ரூபாவுக்கும் கீழ் குறைக்கப்பட்டால் மாத்திரமே முச்சக்கரவண்டிக் கட்டணத்தைக் குறைக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கண்புரை சத்திரசிகிச்சைக்கு யாழ்.போதனாவில் பதியலாம்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். போதனா மருத்துவமனையில் கண்புரை சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது. எனவே கட்புல சத்திரசிகிச்சை செய்வதற்கு யாழ். மாவட்டத்திலோ அல்லது வட மாகாணத்திலோ காத்திருக்கும் நோயாளர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார். கண்புரை நோயால் பாதிக்கப்பட்ட பார்வைக் குறைபாடுடையோர் குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருப்பின் யாழ்.போதனா மருத்துவமனையின் கண்ணியல் சத்திரசிகிச்சைப் பிரிவை நாடுவதனூடாக ஒரு மாத காலத்துக்குள் உரிய சிகிச்சை அளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-45)



# தினம் தெரியுமோ?

பார்க்கிற இடமெல்லாம் இப்ப 'பார்' லைசென்ஸ்"கள் பற்றித்தான் பேச்சு. உந்த பார்களைப் பற்றி கதைக்கிறது, கதைக்க வைக்கிறதும் கூட ஒருவகையில அரசியல்தான். உண்மையில உந்த பார்கள் வெளிப்படையாவே 'மற்றவையை குடிச்சு அழிக்கத்தான் தொழில் செய்யிறம்' எண்டதை போர்ட் எல்லாம் போட்டு சொல்லுகினம். அதால பாருக்குப் போனால் 'குடி' முழுகிடும் எண்டு எல்லாருக்கும் நல்லாவே தெரியும். அதால அங்க ஆரும் இளம் பெடியள் போறதைக் காணுற சொந்தக்காரர் அதைப் பற்றி வீட்டுக்காரரிட்ட முறைப்படி போட்டுக்குடுத்து பூசை புனஸ்காரத்தோட அந்தப் பெடியளை திருத்திற வழியளைப் பாப்பினம். ஆனால் இப்பிடி வெளில வேற வேசம் போட்டுக்கொண்டு, உள்ளுக்க இளம் பெடியளைக் கெடுக்கிற கடையளைப் பற்றி ஒருத்தரும் கண்டுகொள்ளுறேலை.

கண்ணுக்குத் தெரியாத கண்ணிவெடியள் மாதிரி, இப்பிடியான கழிசடைக் கடைகண்ணியள் வடக்கில பள்ளிக்கூடங்களுக்கு பக்கத்திலையும், ரியூசன்களுக்குப் பக்கத்திலையும் இருக்கிறது எல்லாருக்குமே தெரியும். முக்கியமா யாழ்ப்பாண ரவுணுக்குள்ள இப்பிடி பேமஸான பள்ளிக்கூடங்கள், ரியூசன்களுக்கு கிட்ட உள்ள சில தேத்தண்ணிக்கடையளில உந்த விளையாட்டுத்தான் நடக்குது. பேருக்குத்தான் அதுகள் தேத்தண்ணிக்கடை. பள்ளிக்கூடம் முடிஞ்ச பிறகோ இல்லாட்டி ரியூசன் கிளாஸ் முடிஞ்ச பிறகோ உந்தக்கடையளில நல்லூர்த்திருவிழா மாதிரி பெடியள் கூட்டம் சும்மா அள்ளும். முன்னுக்கு பிளேன்ரீக்கு ஓர்டர் குடுத்திட்டு ,எல்லாரும் கவுண்டர் மேசையடிக்குப் போய் நிப்பினம். அங்க அவைக்கு என்ன வேணுமோ 'அது' குடுபடும். ஆளுக்கு ஒண்டுரண்டை வாங்கிக்கொண்டு, தேத்தண்ணிக்கடையின்ர பின் பக்கம் போவினம். அங்க ஏற்கனவே யாகம் செய்தமாதிரி இருக்கிற புகைமண்டலத்துக்க, இந்தப் பெடியள் இன்னொரு பொருளைத் தேடுவினம். ஒரு தேடாவளையக் கயித்தில நெருப்புத்தணல் நுளம்புத்திரி மாதிரி கனன்றபடி இருக்கும் . அப்பிடியில்லாட்டி ஒரு நூலில லைற்றர் ஒண்டைக் கட்டியிருப்பினம். அதில தாங்கள் முன்னுக்கு வாங்கின பொருளை அவை மூட்ட, பிளேன்ரீயும் வரக் கணக்கா இருக்கும். பிறகென்ன, கையில பிளேன்ரீயோடயும் வாயில 'பொருளோடயும்' இவையும் யாகம் செய்து, புகைமண்டலத்துக்க ஐக்கியமாயிடுவினம்.

தொடக்கத்தில பள்ளிக்கூடம் முடிஞ்ச பிறகோ இல்லாட்டி ரியூசன் கிளாஸ் முடிஞ்ச பிறகோதான் உந்தத் தேத்தண்ணிக்கடையளுக்கு வந்து கல்வியால புண்பட்ட மனதை புகை விட்டு ஆத்திச்சினம். இப்ப என்னடாவெண்டால், பள்ளிக்கூடத்தையும், ரியூசனையும் கட் பண்ணிப்போட்டும் தேத்தண்ணிக் கடையிலையே முழுநேரமா நிண்டு 'புகையிரதமாவே' மாறிட்டினம். இப்பிடி தேத்தண்ணிக்கடையள் யாககுண்டமா மாறுறது பி.எச்.ஐ. மாருக்கும் தெரியும். எதுக்கு வீண்சோலி எண்டு அவையும் இதைக் கண்டு கொள்ளுறேலையாம். இப்பிடியே போனால் இனிமேல் பெடியளை பள்ளிக்கூடத்தாலையும், ரியூசனாலையும் வீட்ட வரேக்க, வாகனங்களுக்கு செய்யிறமாதிரி 'புகை ரெஸ்டிங்' செய்துதான் உள்ளுக்க விடுற நிலைமை வந்தாலும் வரலாம்.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊர்காவற்றுறை அந்தோனியார் உடற்பயிற்சிப்போட்டியில் தங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.2
அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது. இந்தப் போட்டி குருநாகல் மலியதேவ பெண்கள் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.
போட்டியில் பங்கேற்ற இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தையும், பெண்கள் பிரிவில் பங்கேற்ற ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் பாடசாலை தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளன. (ச-45-27)

# யாழ்.ஆலயங்களில் நவராத்திரி வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 2
கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 12ஆம் திகதி மானம்பூ உற்சவத்துடன் நிறைவுபெறும். தினமும் மாலை 5 மணிக்கு நவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெறும் என்றும் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

✦✦✦✦

யாழ்ப்பாணம், ஒக். 2
நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நவராத்திரி பூசை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தினமும் மாலை 4 மணிக்கு சிறப்புப் பூசை அபிஷேக வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

✦✦✦✦

யாழ்ப்பாணம், ஒக். 2
நீர்வேலி மனோரஞ்சனி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி பூசை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் ஒரு மணிக்கு சிறப்பு பூசை நவராத்திரி பாமாலை படித்தலும் இடம்பெறவுள்ளது.

✦✦✦✦

யாழ்ப்பாணம், ஒக். 2
நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன.

✦✦✦✦

யாழ்ப்பாணம், ஒக். 2
வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறவுள்ளன. சிறப்புப் பூசைகள், நவராத்திரி பாமாலை படிப்பு என்பனவும் நடைபெறவுள்ளன.

✦✦✦✦

யாழ்ப்பாணம், ஒக். 2
கோப்பாய் இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தினமும் மாலை சிறப்புப் பூசைகள் இடம்பெறவுள்ளன.

✦✦✦✦

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும். தினமும் பிற்பகல் 5 மணிக்கு பூசை அபிஷேகம் என்பன நடைபெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-17)



# விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.2
சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்களின் சமய சமூகப் பணியைப் பாராட்டி விருது வழங்கும் விழா சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது.
சொற்பொழிவு ஆற்றும் குழுவினரால் "ஆகமக்கிரியா சமூக சிரோண்மணி" எனும் விருதும், சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தினரால்" திருமுருக உபாச ஞானி" எனும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# சித்திரப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 2
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட வேலணைப் பொதுநூலகத்தினரால் சித்திரப் போட்டி வயதுக் கட்டுப்பாடின்றி நடத்தப்படவுள்ளது.
போட்டியில்வேலணைப்பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவர்கள் கலந்து கொள்ளமுடியும். போட்டியாளர்கள் தாங்கள் வாசித்த புத்தகம் ஒன்றின் அட்டைப் படத்தை ஏ-3 தாளில் எந்த வர்ணத்தைப் பயன்படுத்தியும் சித்திரம் வரையமுடியும். தாங்கள் வரைந்த சித்திரங்களை எதிர்வரும்17 ஆம் திகதிக்கு முன்னர் வேலணைப் பொதுநூலக நூலகருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (ச-22,66)

# மஹாளய பட்சம் இன்றுடன் நிறைவு

யாழ்ப்பாணம், ஒக்.2
இறந்த மக்களை நினைவுகூர்ந்து நிறைவேற்றப்படும் திதியான மஹாளய பட்சம் இன்று புதன்கிழமை அமாவாசை தினத்துடன் நிறைவுபெறுகின்றது. இத்தினத்தில் மக்கள் தானங்களை வழங்கி பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவர். (ச-45-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். ஆதாயம் ஏற்படும். உறவினர்கள் வகையில் சுபச்செய்தி கிடைக்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். பொறுமை அவசியம். வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனஸ்தாபங்கள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவுமிருக்காது. காரியம் இழுபறியாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும்.

**மகரம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும்.

**கும்பம்:** காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். செலவு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். ஆதாயம் உண்டு. மகாவிஷ்ணுவை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் இணக்கமான அணுகுமுறை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் மீது ஈரான் சரமாரித் தாக்குதல்!

## டெல் அவிவ்வில் ஊடுருவிய போராளிகள் இரவிரவாக சரமாரியான துப்பாக்கிச் சூடு

டெல்அவிவ், ஒக். 2

இஸ்ரேல் மீது ஏவுகணைகள் மூலம் நேற்று நேரடித் தாக்குதல்களை ஈரான் நடத்தியுள்ளது. 200க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலின் தலைநகர் டெல்அவிவை இலக்குவைத்து ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.





இஸ்ரேல் மீது எந்த நேரத்திலும் ஈரான் நேரடியாக இராணுவ தாக்குதல்களைத் தொடுக்கலாம் என்று அமெரிக்கா எச்சரித்த பன்னிரெண்டு மணிநேரத்தில் இந்த சரமாரியான ஏவுகணைத் தாக்குதல்களை ஈரான் நடத்தியுள்ளது. இஸ்ரேல் மீதான ஏவுகணைத் தாக்குதல்களை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.

சைரன் ஒலிகள் கேட்டால் பொதுமக்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்று அடுத்த அறிவிப்பு வரும்வரை அங்கேயே இருக்கும்படியாக தன் மக்களை இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது.

காஸா, லெபனான் மீதான தொடர் தாக்குதல்கள், ஹிஸ்புல்லா தலைவர் கொல்லப்பட்டமை உள்ளிட்டவற்றுக்குப் பதிலடியாக இந்த தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளதாக ஈரானின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள் ஆரம்பித்த சமநேரத்தில், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இரண்டு ஆயுததாரிகள் புகுந்து பொதுமக்கள் மீது சரமாரியான துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அவர்களின் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் வந்துள்ளன. இரண்டு தாக்குதல்களும் சம நேரத்தில் நடத்தப்பட்டுள்ளதால், 'ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியன்று இத்தனை மணிக்கு தாக்குதல் நடத்தப்படும்' என்று ஏற்கனவே திட்டமிட்ட அடிப்படையில் இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இஸ்ரேலைப் பாதுகாக்கும் வகையில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளன. இதனால் பிராந்தியத்தில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. (ம)

# சென்.பற்றிக்ஸ் கல்லூரி 9 மாணவர்கள் 9 'ஏ'

யாழ்ப்பாணம், ஒக்.2

க.பொ.த சாதாரண தரம் 2023 பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் 9 பேர் 9'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர். இவர்களில் தமிழ்மொழி மூலம் 5 மாணவர்களும் ஆங்கிலமொழி மூலம் தோற்றிய 4 மாணவர்களும் 9 பாடங்களிலும் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். அத்துடன் 8ஏ சித்திகளை 6 மாணவர்களும், 7ஏ சித்திகளை 6 மாணவர்களும், 6ஏ சித்திகளை 7 மாணவர்களும், 5ஏ சித்திகளை 9 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

அதேவேளை க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 150 மாணவர்களில் 139 பேர் சித்தியடைந்துள்ளனர். (சு-25)


## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard Ware) ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
ALL CEYLON DISTRIBUTORS
No. 212 & 214, K.K.S. Road, Jaffna
077 494 9683

## கூறு விலை கோரல்

யாழ். நகரில் இயங்கும் பிரபல வைத்தியசாலைக்கு குளிரூட்டிகள் 45 Nos (Air Condition) பழுது பார்ப்பதற்கு கூறு விலை கோரப் படுகின்றது.


1. சாதாரண பராமரிப்பு Normal Service
2. இயந்திர பராமரிப்பு Machanical Service
3. வாயு நிரப்புதல் Gas Refill
4. பொருத்துமிட கசிவு பழுதுபார்த்தல் - பிரதான குழாய் Main Line Leakage repair
5. பக்க சிறு குழாய் கசிவு சீரமைப்பு Sub pipe line leakage repair
6. Net Change
7. Condencer Change

கேள்வி பத்திரத்தை பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

R.SASIKARAN
130, 1st Cross Street, Jaffna.
T.P: 077 029 6557


## மரண அறிவித்தல்

தோற்றம்
14
12
1951



மறைவு
30
09
2024

### விநாயகமூர்த்தி குமரகுருமூர்த்தி

**(முன்னாள் களஞ்சிய பொறுப்பாளர், லங்கா சீமெந்து லிமிடெட்)**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கந்தரோடையை நிரந்தர வதிவிடமாகவம் விவேகானந்த நகர், கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி குமரகுருமூர்த்தி கடந்த 30.09.2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவரதிமலரின் அன்புக் கணவரும், சாய்கிருஷா (விரிவுரையாளர், தொழில்நுட்ப பீடம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகதாஸ் - மீனா தம்பதியரின் அன்பு மருமகனும், அருள்நேசன், மகாலிங்கம், பரமகுமார், ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பதுமைசேனா, மகாலிங்கம், மாலா, விவேகானந்தன், சிவனேஸ்வரி, காலஞ்சென்ற குமாரவேல்பிள்ளை மற்றும் சாந்தா ஆகியோரின் மைத்துனரும், கணேஸ்வரன் (பீடாதிபதி, பொறியியல்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) பாசமிகு மாமனாரும், சாய்சுருதியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.10.2024) புதன்கிழமை இலக்கம் - 219, வள்ளுவர் குறுக்கு வீதி, விவேகானந்தர் நகர், கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் இரணைமடு பொது மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.219, வள்ளுவர் குறுக்கு வீதி,**
**விவேகானந்த நகர், கிளிநொச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 29026) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 19.08.1933

மறைவு 30.09.2024

## செல்லத்துரை தங்கரத்தினம்

இணுவில் தெற்கு, நடுவிளாத்தி ஞானவைரவர் கோவிலடியை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தங்கரத்தினம் கடந்த 30.09.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி, மங்கையற்கரசி, காலஞ்சென்ற செல்வேந்திரம் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நடராசபிள்ளை மற்றும் ரமணகுமாரி (கனடா), பத்மகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, தர்மலிங்கம், சிவகங்கை, நல்லையா, ராசா ஆகியோரின் மைத்துனியும், சற்குருநாதன்-நிலோஜினி (சுவிஸ்), நிரூபன் - சுரேக்கா (சுவிஸ்), கெங்காதரன் - நிறைந்தினி, நிறைந்தன் - அனிதா, ரவிதாஸ் - நிகாஜினி, காலஞ்சென்ற காண்டீபன் விதுசா (கனடா), மதுா (கனடா), கிருஸ்ணகுமார் - சாயகா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், கஜராம், சங்கவி, நிரேனி, நிகாரா, தனோஜன், காருண்யா, கவினியா, நித்திலன், நித்திகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.10.2024) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்பகப்பிள்ளையார் கோவிலடி,**
**உடுவில் கிழக்கு,**
**சுண்ணாகம்.**
**077 5514 327**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# ஐந்தாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு

## இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை

மானுட விடுதலை தொடர்பில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பினை பல்வேறு நோக்கு நிலைகளில் ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதுமே அதன் நோக்கங்களாகும். தமிழியல் ஆய்வு மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி காலை 9 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

### ஆய்வுக் கட்டுரைகள்

இந்த மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் முதலானோரிடமிருந்து கோரப்பட்டிருந்தன. ஆர்வத்துடன் பலர் மாநாட்டுக்கான கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர். இந்தியா, டென்மார்க் முதலான நாடுகளிலிருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் கிடைக்கப்பெற்றிருந்தன. கிடைக்கப்பெற்ற நாற்பத்தெட்டு ஆய்வுக் கட்டுரைகளும் உரிய முறைப்படுத்தலூடாக துறைசார் நிபுணத்துவம் உடையவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன. அவற்றுள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முப்பத்தெட்டு ஆய்வுக்கட்டுரைகள் மட்டும் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அரங்கு, இலங்கையர்கோன் அரங்கு, மஹாகவி அரங்கு, டானியல் அரங்கு என நான்கு அரங்குகளில் அளிக்கை செய்யப்படவுள்ளன.

### ஆளுமைகளுக்குக் கௌரவம்

ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் பல்வேறு புலங்களில் கோலோச்சி வருகின்ற புலமையாளர்கள் சிலரை இனங்கண்டு, அவர்கள் இந்த மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர். உயராளுமைக்கான கௌரவத்தினைப் பேராயர் வண. கலாநிதி. எஸ்.ஜெபநேசனும், படைப்பாளுமைக்கான கௌரவத்தினை மூத்த மரபுக் கவிஞர் சோ.பத்மநாதனும் (சோ.ப) மூத்த எழுத்தாளருக்கான கௌரவங்களை குந்தவை (இரா.சடாச்சரதேவி), அ.யேசுராசா மற்றும் ஐ.சாந்தன் ஆகியோரும் பெறவுள்ளனர்.

### ஊடாட்ட நிகழ்வுகள்

தமிழ்மொழி மீதான ஈடுபாட்டையும் இலக்கியப் பரிச்சயத்தையும் பரவலடையச் செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் உள்ளிட்ட பிற பீட மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டிப் பரீட்சையையும், வடக்கு மாகாணத்தின் பன்னிரண்டு வலயங்களிலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, தமிழறிவுப் போட்டிகளையும் இந்த மாநாட்டின் இணை நிகழ்வுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### முப்பெரும் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் அப்பீடத்தின் ஓர் அங்கமாகிய தமிழ்த்துறையும் தமது ஐம்பதாவது ஆண்டுகளை நடப்பாண்டில் நிறைவு செய்துள்ளன. அவ்வகையில் இவற்றின் பொன்விழாக் கொண்டாட்ட வரிசையில், இரண்டாம் நாள் நிகழ்வினை ‘முப்பெரும் விழா’ என்ற தலைப்பில் கவிதா நிகழ்வு, நடன அரங்கு, தமிழிசை அரங்கு, கூத்து அரங்கு என்றவாறாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் அமரர். பேராசிரியர். சு.வித்தியானந்தன் ஈழத்தின் பாரம்பரியக் கூத்துகளை மீட்டுருவாக்கம் செய்வதில் மிகுந்த அக்கறை உடையவராக விளங்கினார். அவரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வழங்கி வருகின்ற ஈழத்தின் தென்மோடிக்கூத்தின் செழுமையினை வெளிக்கொணரும் வகையில் ‘காத்தான்



கூத்து’ இம்முறை இங்கு மீளவும் மேடையேற்றப்படுகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

### புத்தகக் கண்காட்சி

இம்மாநாட்டினையொட்டி தமிழியல் ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகம் பயனுறும் வகையில் பிரபல பதிப்பகங்களின் புத்தகக் கண்காட்சிக்கும் புத்தக விற்பனைக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கணிசமான விலைக்கழிவில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெளிவரும் நூல்களை இக்காலப்பகுதியில் கொள்வனவு செய்துகொள்ளலாம். இம்மாநாட்டுக்கான முழுமையான நிதிப்பங்களிப்பினை வழமை போன்று ‘சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசு அறக்கொடை நிதியம்’ வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உண்மையான மாற்றம் எது?

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியாகியிருக்கும் நிலையில் அரசியல் கட்சிகளிடையே ஒரு குழப்பநிலைமை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவினால் - நாட்டு மக்களின் எண்ணவோட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றமே அரசியல் கட்சிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மக்களின் மனமாற்றத்துக்கு ஏற்ப கட்டமைப்புகளை மாற்றி நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கு அவை அவசர காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருக்கின்றன.

மாற்றம் என்பதை முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய அநுரகுமார திஸாநாயக்க நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கின்றார். இதுவரைகாலமும் தொடர்ச்சியாக நாட்டை ஆண்டுவந்த கட்சிகளின் வேட்பாளர்களை பின்தள்ளி ஆட்சிக் கதிரையைப் பிடித்திருக்கின்றார் அநுரகுமார திஸாநாயக்க. நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியும் - கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்தவர்களின் ஊழல் மோசடிகளும் மக்கள் மனங்களில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. ஊழல் மோசடிகளில் இருந்து நாட்டை மீட்கவும், ஊழல்வாதிகளைத் தண்டிப்பதற்குமான ஒரு வாய்ப்பாக ஜனாதிபதித் தேர்தலை நாட்டு மக்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். ஜனாதிபதித் தேர்தலில் தென்பட்ட மாற்றம், நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிப்பதற்கு பெரும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதனாலேயே அரசியல் கட்சிகள் வழமைபோன்று தேர்தலை எதிர்கொள்ளமுடியாது தங்கள் கட்டமைப்புகளை மாற்றியமைக்கவேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்துக்கு ஏற்ப பலர் தேர்தலில் இருந்து ஒதுங்கிக்கொண்டு புதியவர்களுக்கு வழிவிடவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அநுரகுமார திஸாநாயக்கவுக்குப் பெரியளவில் ஆதரவு கிடைக்காத போதும், தேர்தல் முடிவுகளின் பின்னர் தெற்கின் நிலைப்பாடு சார்ந்த கருத்தோட்டம் வடக்கு, கிழக்கிலும் தென்பட ஆரம்பித்திருக்கின்றது. தமிழ் மக்கள் அரசியலிலும் மாற்றம் தேவை என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்களை முன்னெடுக்கும் தமிழரசியல் கட்சிகளும் அந்தக் கருத்தோட்டத்துடன் ஒத்தோடி வாக்குகளைச் சேகரிக்க முயல்கின்றன.

ஆனால் இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயமொன்று உண்டு. தமிழ் அரசியல்களம் தெற்கின் அரசியல் களத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது . தமிழ்த்தேசியத்தை எந்த நிலையிலும் தமிழ்மக்கள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்பதே அந்த விடயம். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டமாகவே தமிழரசியல் களம் பயன்படுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணிக்கு தமிழ் மக்களின் பேராதரவு கிடைப்பதற்கு அதுவே காரணமாகவும் இருந்தது. ஆனால் காலப்போக்கில் தமிழினத்தின் போராட்ட வழியில் இருந்து படிப்படியாக விலகிய தமிழ்க் கட்சிகள் கட்சி அரசியல், பதவி அரசியல் என்ற சாக்கடை அரசியலுக்குள் வீழ்ந்தன. தமிழ்த் தேசிய நீக்கத்தை சில அரசியல்வாதிகள் மெல்ல மெல்ல மேற்கொண்டனர். தமிழ்க் கட்சிகளின் இந்தப் போக்கால் அவை படிப்படியாக மக்கள் ஆதரவை இழந்து இப்போது கையறு நிலைமையில் இருக்கின்றன. தமிழரசியல் கட்சிகள் தங்கள் செயற்பாட்டில் முதலில் மாற்றத்தைக் கொண்டுவர முயலவேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படுவோருக்கு நாட்டில் உள்ள ஏனைய மக்கள் பிரதிநிதிகளை விடவும் கூடுதல் பொறுப்பு உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழினத்தின் இருப்புக்கான போராட்டத்தை உந்துசக்தியுடன் முன்கொண்டுசெல்லக்கூடியவர்களை இணைப்பதோடு, தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களை களையெடுத்துவிட்டு பயணிக்க வேண்டும். தங்களுக்கு வாக்கிடும் மக்களுக்காக ஒற்றுமையுடன் செயற்படக்கூடிய - விட்டுக் கொடுப்புடன் நடந்துகொள்ளக்கூடிய போக்கைக் கைக்கொள்ள வேண்டும். தமிழரசியல் களத்தில் முதலில் ஏற்பட வேண்டிய மாற்றம் இதுவே.



புலமைப்பரிசில் பரீட்சை

# விடைத்தாள் திருத்தும்பணி இரு வாரம் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஒக். 2

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரு வாரங்கள் இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் புலமைப்பரிசில் வினாத்தாள் பிரச்சினை தொடர்பில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுவந்த பெற்றோருக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் 3 கேள்விகள் அன்றி 8 கேள்விகள் பரீட்சைக்கு முன்பாகவே வெளியாகி இருந்தன எனவும், அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் பெற்றோர், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதனையடுத்தே புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார். (ச)

# இயங்குநிலையில் ‘அபயம்’



கொழும்பு, ஒக்.2

ஆளுநர் செயலகத்தின் பொதுமக்கள் குறைகேள் வலையமைப்பான ‘அபயம்’ பிரிவின் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும் என்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை ஆளுநரிடம் நேரடியாக அறிவிக்கலாம் என்றும் ‘அபயம்’ செயற்பாடுகள் நிறுத்தப்பட்டது என்று ஆளுநர் செயலகத்தால் முன்பதாக அறிவிக்கப்பட்டது. எனினும் இந்தத் தீர்மானத்தில் மாற்றம் செய்யப்பட்டு அபயத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் இயங்குநிலையில் வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், அலுவலக நேரத்தில் மாத்திரமே முறைப்பாடுகளை முன்வைக்கக் கூடியவாறு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது.

அபயத்தின் 070 6666677 தொலைபேசி இலக்கம் பயன்பாட்டில் உள்ளது என்றும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது. (ச)

# பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு, ஒக். 2

கடந்த ஓகஸ்ட் மாதம் 0.5 சதவீதமாக இருந்த பணவீக்கம் கடந்த செப்ரெம்பரில் -0.5 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்ட மாதாந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் இல் 0.8 சதவீதமாக பதிவான உணவு வகை பணவீக்கம் செப்ரெம்பர் 2024 இல் 0.3 சதவீதமாககுறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அரச தகவல் திணைக்கள பணிப்பாளராகப் பண்டார

யாழ்ப்பாணம், ஒக்.2

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக எச்.எஸ்.கே.பண்டாரவை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய தினித் சிந்தக கருணாரத்ன பதவி விலகிய தால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச)

**நாளை**

03.10.2024

வியாழக்கிழமை - புரட்டாதி - 17

சுபநேரம் : 07.32- 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

**நாளொரு நல்வார்த்தை**

ஆயிரம் காடுகளை உண்டாக்கும் ஆற்றல் ஒரு விதையில் அடங்கியிருக்கிறது.

- எமர்சன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் இலஞ்சம்பெற்று பக்கச்சார்பாக செயற்படுகின்றனர்

## மாற்றுத்திறனாளி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 2

நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி இலஞ்சம் பெற்று தன்மீது தாக்குதல் நடத்தியதாக, மாற்றுத் திறனாளியான க.கிரிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது, சிவில் வழக்கில் பொலிஸார் நேரடியாக தலையிட முடியாது. முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்து நீதி மன்றில் முற்படுத்தியிருக்க வேண்டும். மாறாக எதிராளிகளிட மிருந்து அதாவது வெளிநாட்டவரிடமிருந்து இலஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு நேரடியாக எனது வீட்டின்குள் புகுந்து தாக் குதல் நடாத்தி எனது உடமைகளை தூக்கி வெளியே எறிந்தனர். பொலிஸாரின் ஆதரவுடன் என்மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நான்கு நாட்களாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைபெற்று தற்;போது வீடு திரும்பியுள்ளேன். பொலிஸாரின் இவ் அடாவடி தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவிலும், பொலிஸ் மாவட்ட பிராந்திய பொறுப்பதிகாரியிடமும் முறையிட்டுள்ளேன். பொலிஸார் இலஞ்சம் வாங்கிக் கொண்டு செயற்படும் விதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவைச் சென்றடையும் வகையில் இதனை வெளிக்கொணர்கின்றேன் என்றார்.

(ஒ-26)

# கலாசாலை தின விழா



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக் கும் கலாசாலை தின விழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் சிறப்பாக இடம்பெற் றது.

நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ஜமுனா ராஜசீலன் பிர தம விருந்தினராகக் கலந்து கொண் டார்.

கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர்.பொன் இராமநாத னைக் கௌரவப்படுத்தும் வகையில் 'ஆசிரிய கல்வியியலாளர்களின் தத் துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர் பில் மேற்கிளம்பும் சவால்களும் அவற்றைத் தாண்டிப் பயணித்தலும்' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ் வரா சேர்.பொன்.இராமநாதன் ஞாப கார்த்த நினைவுப் பேருரை ஆற்றி னார்.

(ச-66)


## கருணாலயம் அன்னை கிருஷ்ணபாய் மகளிர் அபிவிருத்தி நிலையம்-திருநெல்வேலி

**அறிவித்தல்**

எமது கருணாலயம் அன்னை கிருஷ்ணபாய் மகளிர அபிவிருத்தி நிலையத்திற்கு நன்கொடையாக வழங்க விரும்பும் அன்பர்கள் அவ்வாறான அன்பளிப்புக்களை நேரடியாக அலுவலகத்தில் ஒப்படைத்து பற்றுசீட்டை பெற்றுக்கொள்ளவும். நீங்கள் விரும்பினால் எமது இல்லத்தின் வங்கிக்கணக்கு இலக்கத்திற்கு (Hatton National Bank Thirunelvely) 14401000527O) வைப்புச் செய்து எமக்கு அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள் கின்றோம்.

நன்றி 021 222 8490
நிர்வாகம் 021 721 0910


# பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்.மல்லாகம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.கணேசராசா தலை மையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதி காரி மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் பிரதம விருந்தின ராகக் கலந்து கொள் ளவுள்ளார். நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது.

(ச-66)


## வேலைவாய்ப்பு
## எரிபொருள் நிரப்புநர்


(ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளையின் வருமானமீட்டும் செயற்திட்டமான Lanka IOC எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புநர்களுக்கான வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது. ஆர்வமுள்ளவர்கள் தங்களின் சுயவிபரக்கோவையுடன் அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நேரில் சமுகமளிக்கும்படி அறியத்தருகின்றோம்.



லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையம்
இல.73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்



தோற்றம் - 06.07.1940 மறைவு - 01.10.2024

### தம்பையா காத்தலிங்கம்

கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா காத்தலிங்கம் அவர்கள் நேற்று (01.10.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


259/2, குருகுல வீதி,
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சிவகுமாரன்

பிறப்பு : 04.07.1962 இறப்பு : 01.10.2024



கற்குளி சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும், மட்டுவில் மத்தி சாவகச் சேரியினை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவகுமாரன் அவர்கள் நேற்று (01.10.2024) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான பூபால சிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சாந்தினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (ஜேர்மனி), திவாகரன் (ஆசிரியர்), சசிகரன் (உதவி முகாமையாளர்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாரங்கா (ஜேர்மனி), தனுசியா சஜிதா ஆகியோரின் மாமனாரும், மகிஷா, ஹரணி ஆகியோரின் அப்பப்பாவும், தர்மலிங்கம், காலஞ்சென்ற வர்களான நடராசா, கந்தசாமி, சின்னத்துரை ஆகியோரின் சகோதரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெணியன் நேரியத்தூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 083 3709

(CR/43326) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.10.2024
புதன்கிழமை

# புதன்

பயணங்கள் நமக்கு
பொறுமை மற்றும்
சகிப்புத்தன்மையைக்
கற்றுக் கொடுக்கின்றன.

- பெஞ்சமின்
டிஸ்ரேலி





# இலங்கை அரசியலில் பால்நிலை சமத்துவம்

## ஹரிணியின் நியமனம் தொடக்கப் புள்ளியா?

செ.லெனின்வளவன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஊழலற்ற தலைவன் தனது அரசியல் நலன்களைக் காட்டிலும் தேசிய ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மை, நீதி பரிபாலனம் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'வளமான நாடு: அழகான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் மீது இலங்கை மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தேர்தல் முடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் திருநாட்டின் மறுமலர்ச்சி யுகமொன்றை உருவாக்குவதற்காக இன,மத,மொழி மற்றும் பிராந்திய வேறுபாடுகளை விடுத்து இலங்கையர்களாக ஒன்றுபடுமாறு அவர் அனைத்து மக்களையும் அழைத்திருக்கிறார். 'அவர்கள் எங்களைப் புதைக்க நினைத்தனர். நாங்கள் விதைகள் என்று அவர்களுக்குத் தெரியாது' என்று கூறும் அநுர தனது கருத்துகளை மக்களின் மனங்களில் விதைப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவற்றை செயல்வடிவிலும் நடைமுறைப்படுத்திக் காட்டத் தொடங்கியிருக்கிறார். அவரது புரட்சிகர அரசியலின் தொடக்கமாக இலங்கை வரலாற்றில் 3ஆவது பெண் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆணாதிக்கம் வெளிப்பட்ட ஜனாதிபதித் தேர்தல்

அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் (39) போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தல் என்ற சாதனை இம்முறை நிகழ்ந்த போதிலும் பெண் வேட்பாளர்கள் எவரும் இல்லாத ஜனாதிபதித் தேர்தலாகவும் அமைந்துவிட்டது. இது இலங்கையின் ஆணாதிக்க கலாசாரத்தினை பிரதிபலிப்பதாக ஓய்வுநிலை தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 51.9 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்களாவர். பால்நிலைச் சமத்துவத்திற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளபோதிலும் நடந்து முடிந்த தேர்தலில் பெண்கள் எவரும் போட்டியிட முன்வராமையானது இலங்கை அரசியலில் பெண்கள் தொடர்ச்சியாக எதிர்கொண்டுவரும் சவால்களை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதித் தேர்தல்கள் வரலாற்றில் இதுவரை நான்கு பெண்களே போட்டியிட்டுள்ளனர். சிறிமா பண்டாரநாயக்கா (1988), ஶ்ரீமா காமினி திஸாநாயக்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க (1994), அஜந்தா விஜேசிங்க பெரேரா (2019) ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிட்டுள்ளனர். எனினும் இவர்கள் நால்வரில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மாத்திரமே இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பதுடன் இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதியெனும் சாதனையைத் தனதாக்கினார். 1999ஆம் ஆண்டில் இடம்பெற்ற நான்காவது ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான 20 வருட காலத்தின் பின்னரே அதாவது 2019ஆம் ஆண்டே மீண்டும் ஒரு பெண் வேட்பாளர் போட்டியிடும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இதேபோன்று 1994ஆம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டு 30 வருடங்களின் பின்னரே 2024ஆம் ஆண்டு ஹரிணி அமரசூரிய இலங்கையின் பிரதமராக தற்போதய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.



1994ஆம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டு 30 வருடங்களின் பின்னரே 2024ஆம் ஆண்டு ஹரிணி அமரசூரிய இலங்கையின் பிரதமராக தற்போதய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பெண் பிரதிநிதித்துவம் மழுங்கடிக்கப்படுவதேன்?

பால்நிலைச்சமத்துவத்தினை அடிப்படையாகக்கொண்டு பெண்களுக்கான சம உரிமைகளை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கையில் காணப்படுவதுடன் அரசியலில் பெண்களின் சம பங்களிப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையிலும் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. சட்ட ஏற்பாடுகளும் ஒப்பந்தங்களும் எழுத்துருவில் உள்ளனவே தவிர யதார்த்தம் முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்துவந்துள்ளது. சுதந்திர இலங்கையில் 1972 முதல் இன்றுவரை ஆட்சிசெய்துள்ள 10 ஜனாதிபதிகளுள் ஒருவர் மாத்திரமே பெண். 16 பிரதமர்களுள் மூவர் பெண்கள். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக இருக்கும் தேயிலை உற்பத்தி மற்றும் தைத்த ஆடை ஏற்றுமதி கைத்தொழில் போன்ற துறைகளில் பெண்களின் பங்களிப்பு என்பது ஆண்களை விடவும் பன்மடங்கு அதிகமாக காணப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சிக்காக உழைக்கும் பெண்கள் அதிகாரப் பதவிகளுக்கு வருவதற்குமட்டும் ஏன் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சியில் அதிகம் கைகொடுக்கும் பெண்கள் அதிகாரத்திற்கு வருவதை தீர்மானிக்கின்ற அதிகார சக்தி எது.? சர்வதேச மகளிர் தினத்தில் மகாகவி பாரதியாக வேடம்போட்டு பெண்விடுதலை, பால்நிலைச் சமத்துவம் தொடர்பில் மணிக்கணக்காக உரையாற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் தங்களது தேசியக் கட்சிகளில் பெண்களுக்கான முக்கியத்துவத்தை வழங்கியதில்லை.

இலங்கையின் தேசியக் கட்சிகள் எத்தனை வீதம் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வைத்துள்ளன? கட்சியின் மத்திய குழு உட்பட அதி உயர் அதிகாரத்திலும் தீர்மானமெடுத்தலிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான், தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் பெண் ஒருவரையே பிரதமராக நியமிப்பேன் எனும் தனது தேர்தல்கால வாக்குறுதியை அநுர புரட்சிகரமாக நிறைவேற்றியிருக்கிறார். அதுவும் இலங்கையின் பிரதமர்களது வரலாற்றில் கலாநிதிப்பட்டத்தினை பெற்ற முதலாவது பிரதமராக இவர் காணப்படுகின்றார். பால்நிலைச் சமத்துவத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் இலங்கைத் திருநாட்டின் மறுமலர்ச்சி யுகமானது கலாநிதி ஹரிணி அமரசூரியவின் நியமனத்துடன் ஆரம்பமாகின்றதா.? பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ பா.குமுதன்

# பண்பாட்டைப் பிரதிபலித்த வவுனியா கலாசாரவிழா




மாறிவரும் சமூக ஒழுங்கில் மறந்துபோன எமது பாரம்பரியங்களையும், பண்பாட்டையும் பாதுகாத்து தற்கால சந்ததிக்கு கடத்தும் நோக்குடன் பிரதேசங்கள் தங்களுக்குரிய கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தும் விதமாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவுனியா பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய 'வவுனியா பிரதேச கலாசாரவிழா' அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச செயலாளர் நா.கமலதாசன் வழிகாட்டலில் காலை மற்றும் மாலை என இரு பிரிவுகளாக நிகழ்வுகள் இடம்பெற்றன.

மங்கல இசை முழங்க விருந்தினர்கள் மற்றும் கலைஞர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன் தமிழ்தாய் வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. நிகழ்வுக்கான வரவேற்பு நடனத்தை பரதநர்த்தனாலய மாணவிகளும், சிதம்பரேஸ்வரம் நடனாலய மாணவர்களும் வழங்கியிருந்தனர். மண்டபத்தில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் இடம்பெற்ற கலாசார நிகழ்வுகள், நிகழ்வை செம்மையாக்கி மெருகூட்டின. அதனைத் தொடர்ந்து வவுனியாவின் மரபுகளை உள்ளடக்கிய 'வவுனியம் இதழ் - 8' கலை இலக்கிய பண்பாட்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை பிரதேசசெயலாளர் நா.கமலதாசன் வெளியிட்டுவைக்க முதற்பிரதியை தமிழ்மணி அகளங்கன் பெற்றுக்கொண்டார். நூலுக்கான வெளியீட்டுரையை ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி ஞா.ஜெகநாதன் வழங்க, ஆய்வுரையை ஓய்வுநிலை ஆசிரியர் ஐ.கதிர்காமசேகரன் வழங்கினார்.






தொடர்ச்சியாக வவுனியா பிரதேசத்தின் மொழி, கலை, கலாசாரம், இயல், இசை நாடகத்துறைகளில் பங்களிப்பு செய்தவர்களுக்கான 'கலாநேத்ரா' விருதும் வழங்கப்பட்டது. விருது வரிசையில் நாடக ஆற்றுகைக்கான விருதை தர்மரத்தினம் தவயோகன், நடனம் பிரிந்திகா சிவராஜா, ஊடகம் நவரத்தினம் கபில்நாத், வாத்திய இசை இந்திராணி சண்முகலிங்கம், ஆக்க இசை ஜேம்ஸ்கோல்டன் ரஞ்சன் சம்சன், கட்டுரை பாலசுப்பிரமணியம் குமுதன், மெல்லிசை ஞானப்பிரகாசம் யோகலிங்கம், ஓவியம் துரைராசா டிசாந்தன் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து வவுனியா பிரதேசசெயலகத்தால் நடத்தப்பட்ட 'வவுனியாவின் குரல் -2024' இல் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக அருணா செல்லத்துரை, த.அகளங்கன், இராசுப்பிரமணியம், செ.மதுரகன், கிருபாகரி யோகராஜா, வேல்விழி சூரியகுமார், சூரிய யாழினி வீரசிங்கம், ஆகியோர் கலந்துகொண்டனர். நன்றி உரைகளை கலாசார உத்தியோகத்தர் க.அபிராமி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.துஜான் ஆகியோர் வழங்கினார்கள். ■

# நவீன யுகத்தை வெற்றிகொள்ள சிறந்த நண்பர்கள் அவசியம் 5





■ பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)
*எழுத்தாளர்,*
*ஊக்குவிப்பு பயிற்சி பயிற்றுவிப்பாளர்,*
*சண்மூன் இன்ஸ்பிரேசன் நிறுவன இயக்குநர்.*

*"நண்பனை அடைந்தவன் ஒரு முழுமனிதன்" (பிளேட்டோ)*

*"இரு உடல் ஓர் ஆன்மாவில் வாழ்வது நட்பு" (அரிஸ்ரோட்டில்)*

மேற்கூறிய கருத்துகள் ஒரு மனிதனுடைய வாழ்வில் நட்பு அவசியம் என்பதனை ஆழமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. எங்களுடைய வாழ்வில் இடம்பெறும் சவால்களைத்தாண்டி, வெற்றியினை அடைந்து கொள்வதற்கு இந்த வெற்றிக்கான விதியில் நட்பின் பங்களிப்பு மிகவும் அவசியமாகின்றது. போட்டிகள், தொழில்நுட்பங்கள் நிறைந்த நவீன யுகத்தில் வெற்றியாளர்களாக வலம் வருவதற்கு எம்மோடு சில கரங்கள் இணைய வேண்டும் என்பதே தத்துவவியலாளர்களின் கருத்தாகும். வாழ்க்கையில் வெற்றி என்ற இடத்தை அடைவது எவ்வளவு சுமையாக இருந்தாலும் நண்பனோடு பகிர்ந்து அதனை செய்யும்போது சுமை குறைவதோடு, எமது வெற்றியை இலகுவில் சென்றடையவும் முடியும். நவீன யுகத்தில் நண்பர்களின் முக்கியத்துவமானது, வெற்றிக்கடலை சென்றடைகின்ற நதியிலேயே எத்தகைய தடைகள் வந்தாலும் இணைந்து அதனை எதிர்கொள்ள துணைபுரியும். நாம் சிறுவயது முதல் இப்போதுவரை பல நண்பர்களை கண்டிருப்போம். சில நண்பர்களிடமிருந்து பல்வேறு நன்மைகளையும், சில நண்பர்களிடமிருந்து தீமைகளையும் அனுபவித்திருப்போம். இந்த அனுபவம்தான் எங்களின் எதிர்காலத்தில் எவ்வாறான நண்பர்களோடு இணைந்து பயணிக்கவேண்டும் என்ற வழிகாட்டலை அளிக்கின்றது. இந்த உலகில் போலியான நண்பர்கள் மூலம் வாழ்வை அழித்து தோல்வியில் மூழ்கியவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவேதான் எங்களின் தெரிவில் நாம் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் வாழப்போகும் இந்த வாழ்க்கை மிகவும் பெறுமதியானது. அந்த வாழ்வு பெறுமதியாக மற்றவருக்கு பயனுள்ளவகையில் அமைய வேண்டும் என்பதே இவ் வெற்றிக்கான விதியின் ஆழ்ந்த நோக்கமும் கூட. வள்ளுவர் தனது குறளிலே

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

ஓர் உண்மையான நண்பர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதனை தெளிவுபடுத்துகின்றார். இப்படித்தான் நல்ல நண்பர்களின் செயல்கள் எங்களுடைய துன்பம், நெருக்கடிகளின் போதும், பல்வேறு தேவையான நேரங்களில் துணை நிற்கின்றது என்பதனை நாம் அனுபவரீதியாக உணர்ந்திருப்போம். எங்களுடைய வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களில் துன்பங்களினை அனுபவிக்கும் போது, அதிலிருந்து மீண்டு வருவதற்கு பல நண்பர்களின் கைகள் பலமாக அமைந்திருக்கலாம். எனவே அத்தகைய நண்பர்களை நாம் வாழ்வில் இணைத்துக்கொள்வது சிறப்பானதாகும். இதே போன்றுதான் போலியான நண்பர்களை தெரிவு செய்யும்போது சில முக்கியமான விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "உங்களைத் தாக்கும் எதிரிகளைப் பற்றி நீங்கள் பயப்படாதீர்கள். உங்களைப் போலியாகப் புகழும் நண்பர்களைப் பார்த்து பயப்படுங்கள்" என்று மெக்சிக்கோவில் மாவீரன் "அல்பரோ ஒப்ரெசா" என்பவரின் சிலையில் வசனம் செதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகில், வாழ்வில் முன்னேறாத பல மனிதர்கள் முறையற்ற நண்பர்களை தங்களுடைய வாழ்வில் கொண்டிருந்தமையால் வெற்றியின் பக்கம் தொடர்ந்து செல்ல முடியாமல் போயுள்ளது. எனவேதான் நண்பர்களை தெரிவுசெய்யும் போது சில விடயங்களை எச்சரிக்கையாக கொள்ளவேண்டும். பொதுநலத்தோடு இணைந்து செயற்படுகின்ற நண்பர்களினை வாழ்வில் இணைத்துக் கொள்வது சிறப்பானது. அவர்கள் தங்களுடைய வெற்றியை மாத்திரமே கவனத்தில் கொள்ளாது நண்பனின் வெற்றியிலும் அதிக அக்கறைகொண்டிருப்பார்கள். ஆனால் தங்கள் வெற்றி மட்டுமே முக்கியம் என்கின்ற சுயநலமான நண்பர்களை தவிர்ப்பது சிறப்பானது. அதேபோல இரகசியம் பேணக்கூடிய நண்பர்களாக இருக்கவேண்டும். உண்மையாக பழகும் எந்த நண்பனிடமும் வன்மைத்தன்மை ஒருபோதும் இருக்காது. அவர்கள் அன்பு என்ற வார்த்தைக்கு கட்டுப்பட்டுத் தங்கள் தூயநட்பை நண்பருடன் பகிர்ந்து கொள்வார்கள். சிறந்த தொடர்பாடல் என்பது நல்ல நண்பர்களிடம் காணப்படும். நல்ல பண்பு. நண்பரின் வெற்றியையே அதிகம் விரும்புவார்கள். இப்படியானவர்களை நாம் தெரிவுசெய்து வாழ்வில் முன்னேறுவதே சிறப்பானது. நட்பைப் பெறுவதில் நிதானமாக இரு. நட்பை பெற்ற பின்பு உறுதியுடன் நீடித்து நட்பைக் காப்பாற்று (சோக்ரடீஸ்)

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அழிவடைந்து வரும் பிரம்புக் கைத்தொழில்

ஞா.மைக்கல் பெவன்
3ஆம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை

இலங்கையில் பல பகுதிகளிலும் பிரம்புக் கைத்தொழில் பரவிக் காணப்படுகின்ற போதிலும், மட்டக்களப்பில் அதன் மகத்துவம் தனித்துவமானது. இதன்படி, கொடுவாமடு, மாவடி வேம்பு, கொக்கட்டிச் சோலை, சாய்ந்தமருது போன்ற இடங்களில் இந்தப் பிரம்புக் கைத்தொழில் வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நீரேரிகளில் வளரும் ஒருவகை பிரம்புகளே இந்தத் தொழிலுக்கான மூலப்பொருள்களாகக் காணப்படுகின்றன. காடுகளை அண்டிய பிரதேசங்களிலும் இந்தத் தாவரம் வளர்வதாக பிரதேச வாசிகள் கூறுகின்றனர். முதியோர்கள், கைம்பெண்கள் மற்றும் அன்றாட கூலித்தொழில் செய்வோரே இந்தக் கைத்தொழிலில் அதிகம் ஈடுபடுகின்றமை அவதானிப்பு.


பிரம்புக் கைத்தொழில் என்பது அவ்வளவு இலகுவில் செய்துவிடும் ஒரு தொழிலல்ல. முட்கள் நிறைந்த மரங்களை ஊடறுத்தும், காட்டு விலங்குகள் மற்றும் விரியன் பாம்புகளின் அச்சுறுத்தல்களைத் தாண்டியும் சென்று மேற்கொள்ளும் மூலப்பொருளுக்கான தேடுதல்களில் இந்தக் கைத்தொழிலுக்கான முதற்கட்ட சவால்கள் ஆரம்பிக்கின்றன.

வெடிக்கொண்டுவரப்பட்ட பிரம்புகளை ஊற வைத்து, படிப்படியாக ஒவ்வொரு படைகளாக அகற்றி, பின்னர் அதை வலிமைப்படுத்தி அதன் பின்னர்தான் உற்பத்திகள் ஆரம்பிக்கின்றன. தொட்டில், இடியப்பத்தட்டு, கைப்பட்டி, விவசாயத்துக்குப் பயன்படும் மரைக்கால், சுளகு, கூடை, புத்தக அலுமாரி, பூச்சாடி மற்றும் அலங்காரப் பொருட்கள் என பல்வேறுபட்டவை பிரம்புகளைக்கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தியின்போது மட்டுமல்ல, உற்பத்தி செய்யப்பட்ட பொருளை சந்தைக்குக் கொண்டுசெல்லும்போதும்கூட பெரும் சவால்களை அந்தப் பெண்கள் எதிர்கொள்ள வேண்டியிருப்பதை மறுப்பதற்கில்லை.

பிரம்பு உற்பத்திகள் எனப்படுபவை வருடம் முழுவதும் பயன்தரும் தொழில் அல்ல. இங்கே மக்களின் வருவாயில் காலநிலை பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றது. மழைக்காலங்களில் உற்பத்தியை மேற்கொள்ள முடியாமை, உற்பத்தி மேற்கொள்வதற்கு அதிக காலம் தேவைப்படுகின்றமை, அதிக வெயில் காலங்களில் பிரம்புகள் பிளந்து போகின்றமை, அதிக பனிக்காலங்களில் பிரம்புகள் பூஞ்சனம் பிடிக்கின்றமை போன்றன உற்பத்தியை சரிவர மேற்கொள்ளமுடியாத நிலைக்கு இட்டுச்செல்கின்றன.

பிரம்பால் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு மாற்றீடாக பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருட்கள் சந்தையில் தற்போது குவிந்துள்ளன. சீன, ஜப்பான் பிளாஸ்ரிக் பொருள்கள் மிகக் குறைந்த விலைக்குக் கிடைப்பதால், இந்தப் பொருள்களின் அதீத வருகையால் பிரம்பு உற்பத்திகள் நாளுக்குநாள் மக்களின் தினசரிப் பாவனையில் இருந்து வெளியேற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

நாம் எவ்வளவுக்கெவ்வளவு உள்ளூர் உற்பத்தியைப் பயன்படுத்துகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாமும் நலமாயிருப்போம் எம் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதரமும் மேம்படும். இதை பொதுமக்கள் உணர்வதுடன், அரசாங்கமும் இதற்கேற்ப சிறப்புச் செயற்றிட்டங்களை முன்வைக்க வேண்டும்.



# புரியாத புதிர்

வரிகள் அரிவரிக் கிறுக்கல்களாகக்கூட இருக்கலாம்
புரியாத புதிர் தான் வாழ்க்கை புரிந்து கொண்டால்
மகிழ்ச்சி எங்கும் இருக்கலாம்! இறைவன்
தலையெழுத்து எந்த மொழியென்று எவருக்கும் தெரியாது

உடல் அடிமைப்பட்டுப் போனால் உழைப்பு எனதல்ல!
ஆன்மா அடிமைப்பட்டும் போனால் அறிவு எனதல்ல
அந்த இறைவனுக்கே
உடல் பொருள் (உழைப்பு) ஆவி (ஆன்மா)
அனைத்தும் மீளா அடிமை – இது தலையெழுத்து

சிரஞ்சீவியாக வாழவிருப்பம் தான் சஞ்சீவி
மனம் வைத்தால் சாத்தியமாகக்கூட ஆகலாம்!
அரிவரிக்கு என்ன அருகதை எனக் கேள்விகள் எழலாம்
ஏலவே பட்டது ஞாபகம் இருக்கின்றது!

கவிதைக்கு வரிகள் தவிர்க்க முடியாதவை
வரிகளே கவிதைகளாகவிடவும் முடியாது
கனதியாகத் தொடுக்க வார்த்தைகளைத் தேடுகிறேன்
கச்சிதமாய் முடிக்கவும் முயல்கின்றேன்.



இராம ஜெயபாலன்

புதன்பொய்கைக்கு
நீங்களும்
எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் வாமதேவன் ஞானசோதி (கெங்கா)

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்)

அம்மா !
நாங்கள் தூங்கும் போது
நீங்கள் விழித்திருந்தீர்கள் !
நீங்கள் தூங்குவதற்காக
நாங்கள் விழித்திருக்கின்றோம் !

கடந்த 02.09.2024 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத்தெய்வம் அமரர் வாமதேவன் ஞானசோதி (கெங்கா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (30.09.2024) திங்கட்கிழமை அன்று கீரிமலையில் நடைபெற்றது. இன்று (02.10.2024) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியையின்போது நேரிலும், தொலைபேசி, சமூக வலைத்தளங்களினூடாகவும் ஆதரவு தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

26/12, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்
077 624 8327

(CS/1483) J-1

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை,
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள்
பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப்
பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு
துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

(CS/1463) J-1

077 138 7596, 071 999 9306

# மரண அறிவித்தல்

## சுபத்திரா (பபி) இராமநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், 86, 1 ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுபத்திரா இராமநாதன் அவர்கள் கடந்த (28.09.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - யோகாம்பிகை தம்பதியரின் புதல்வியும், குணாளன், தயாளன் (கனடா), அனுசியா (இத்தாலி), சியாமளா ஆகியோரின் சகோதரியும், மீனா (கனடா), ரஜீந்திரன் ( இத்தாலி ) ஆகியோரின் மைத்துனியும், வித்தியசாகர், சரத்சாகர் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2024) வியாழக் கிழமை காலை 8.30 மணியளவில் இல 86, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் அவரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86, 1ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


தகவல்:
தயாளன் (சகோதரன்)
+164 767 70978 Whatsapp

(CS/56346) J-1

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (தில்லை)

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், Geographic information systems (GIS) Consultant)



மலர்வு
21.03.1945

உதிர்வு
29.09.2024

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கொழும்பு , சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், Geographic information systems (GIS) Consultant) அவர்கள் கடந்த 29-09-2024 ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கனகாம்பிகை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சிவஞானவதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருமதி யோகராணி தில்லைநடராஜன் (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும், சுபோதினி (லண்டன்), பாமினி (லண்டன்), அஜந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராஜா (லண்டன்), மனோகரன் (லண்டன்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தநாயகி (சாவகச்சேரி), பத்மசேனன் (கனடா), காலஞ்சென்ற மனோகரி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராஜசங்கரி, தங்கராணி (கனடா), காலம்சென்ற மகாதேவன், காலஞ்சென்ற ஆனந்தநடேசன் மற்றும் - சுகுனாம்பிகை (கனடா), விமலாராணி - சண்முகதேவன் (நீர்வேலி), காலம்சென்ற இந்திராணி - சுகுனாநந்தன் (கனடா), ஜெயராணி - உமாபதிசிவம் (ஜேர்மனி), அருமைநாதன் - கிருபானந்தி (கனடா), இராசேந்திரம் - சரோஜினிதேவி (ஜேர்மனி), செல்வராணி - பாலசிங்கம் (நீர்வேலி), பத்மராணி - குகராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தில்குமார், ஜானகி, முரளினி - முரளிதரன், நடனதேவன் - தீபா, துவாரகன் ஆகியோரின் மாமனாரும், உஷா, கோபகன் ஆகியோரின் பெரியப்பாவும், சாருஜன், கிருஜன், தீபனா, தீபிகா, சாரங்கன், சிறிரங்கன், அபிஷா, கோகிலவதனன், கோகில்ராஜ், விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2024) வியாழக்கிழமை இலக்கம் 3, கற்குழி ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்என்பதை பணிவன்போடு அறியத்தருகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுபோதினி - மகள் - +44 7984 438266
பாமினி - மகள் - +44 7975 853181
அஜந்தன் - மகன் - +1 6477 796799

தகவல்:
குடும்பத்தினர்

(CR/43323) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) 2024

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG) - 2024 கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: -021-205 8867 ) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.10.02 ஆம் திகதியில் இருந்து 2024.10.18 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். அவர்களிடமிருந்து 2024.10.02 ஆம் திகதியிலிருந்து 2024.10.16 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையிலும், 2024.10.18 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றைக் குறிப்பிட்டு தனித்தனி கடித உறைகளில் இட்டு தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 2024.10.18 ஆம் திகதி பி.ப 2:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக, அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்விப் பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.10.09 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(13)/4/PSDG /2024/02 | தச்சன்பிட்டி மயான எரிகொட்டகை அமைத்தல் - புத்தூர் | 2.52 | 45 நாட்கள் | C8அல்லது C7 (கட்டட நிர்மாணம்) | 63 நாட்கள் | 26,000.00 | 2025.01.17 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.10.02

(CR/43328) J-1

# ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## உப அலுவலகம்,உடுவில்.
## வட்டாரம் -2 மயான வீதி, ஆதன இல 43

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -2 மயான வீதியில் அமைந்துள்ள 43 இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் S.செல்வராசா எனும் பெயரில் உள்ளது.

மேற்படி ஆதனம் வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்ரிக் வலிகாமம் தெற்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறையில் அமைந்துள்ள "அரியாரி ஒல்லை" எனக்குறிப்பிடப்பட்டுள்ள பரப்பு நிலை இலாச்சம் இருப்த்தியெட்டு (ப.நி.இ 28) இதில் மேற்குப் பக்கமாக நிந்தப்படுத்தப்பட்ட பரப்பு நிலை இலாச்சம் ஐந்து (ப.நி.இ 5) செல்லத்துரை செல்வராசா என்பவர்களால் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் குமாரசுவாமி முகதாவில் 7292ம் இலக்க 17.08.2003ந் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் எனது காலம் சென்ற தாயாரின் காலம் சென்ற தகப்பனார் கந்தன் சண்முகத்திற்கு சொந்தமாய் இருந்து நெடுங்காலமாக அவரிடா ஆட்சியிலும் இருந்தது என்றும் அவரின் மற்றப் பிள்ளைகளுக்கு சீதனம் கொடுக்கப்பட்டு எனது தாயாருக்கு கொடுக்கப்படாமையாலும் அவரின் தகப்பனார் உயிரோடு இருக்கும் பொழுது அவர் இறக்கும் சிறிது காலத்திற்கு முன்னர் இவ்வாதனம் எனது தாயாருக்கு சேர வேண்டும் என்று எனது தாயாருக்கு வாய்ச்சொல் நன்கொடையாக கொடுத்தார் என்றும் அப்படி கொடுக்கப்பட்ட படியால் எனது தாயார் அன்றில் இருந்து அவ இறக்கும் வரை கடந்த 46 வருடங்களாக தங்கு தடையற்றதும் எவருக்கும் மாறானதும் சுயாதீனமானதுமான ஆட்சி செய்து கொண்டு வந்தார் என்றும் அப்படியாக அவ 46 வருடங்களாக ஆட்சி செய்து கொண்டு வந்தபடியால் அவ செய்து கொண்டு வந்த ஆட்சியாலும் இவ்வாட்சியால் அவ பெற்றுக்கொண்ட ஆட்சி உரிமையாலும் இவ்வாதனம் அவவுக்கு பூரண சொந்தமாய் வந்துள்ளதென்றும் அவ 1986ம் ஆண்டு இறந்தார் என்றும் அவாவின் மூன்று பிள்ளைகளை விட்டு இறந்தார் என்றும் அவர்களில் இரண்டு பேர் பெண் பிள்ளைகள், எனது தாயார் இறக்க முன்னரே அவர்களுக்கு சீதனம் கொடுத்து விவாகம் செய்து வைக்கப்பட்டதென்றும், அப்படி சீதனம் கொடுக்கப்பட்டமையால் இவ்வாதனம் நான் எனது தாயாரின் ஏக புத்திரன் என்ற முறையில் இவ்வாதனம் எனது தாயாரிடம் இருந்து முதுசமாக வந்துள்ளதென்றும், நான் கடந்த 17 வருடங்களாக தங்கு தடையற்றதும், எவருக்கும் மாறானதும், சுயாதீனமானதுமான ஆட்சி செய்து வருகின்றேன் என்றும் இப்படி ஆட்சி செய்து கொண்டு வருகின்றபடியால் இவ்வாட்சியாலும், இவ்வாட்சியால் நான் பெற்றுக் கொண்ட ஆட்சி உரிமையாலும் இவ்வாதனம் எனக்கு பூரண சொந்தமாய் வந்துள்ளது என்றும், இவ்வாதனம் எனக்கு முதுசமாக வந்து முதுசமூலமும் எனக்கு சொந்தமாய் வருகின்றதென்றும் நான் செய்து கொண்டு வருகின்ற ஆட்சி மூலம் எனக்கு சொந்தமாய் இருக்கின்றதென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாதனத்தை நான் 1968ம் ஆண்டில் இருந்து பராமரித்து வருகின்றேன் என்றும் 1968ம் ஆண்டில் இருந்து வருடா வருடம் உழுது பண்படுத்தி பயிர்வகை செய்து கொண்டு வருகின்றேன் என்றும், 1968ம் ஆண்டில் இருந்து இதில் வரும் பிரயோசனங்களை நானே எடுத்து அனுபவித்து வருகின்றேன் என்றும் இதனால் வெளிப்படுத்துகின்றேன்.
இவ்வாதனம் சம்பந்தமாக வேறு எவருக்கும் எதுவித சன்மானமும் செய்யாது நான் கடந்த 17 வருடங்களாக தங்குதடையற்றதும், எவருக்கும் மாறானதும், சுயாதீனமானதுமான ஆட்சி செய்து கொண்டு வருகின்றேன் என்றும் ஆட்சியுரிமைச்சட்டத்தின் மூன்றாம் பிரிவின்கீழ் எனக்கு ஆட்சியுரிமை வந்துள்ளதென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாதனம் எவ்வகையாகவேனும் பாரிக்கப்பட்டு அல்லது பராதீனப்படுத்தப்பட்டும் இருக்கவில்லை என்றும் இவ்வாதனத்தை அறுதி விற்கவோ, நன்கொடை கொடுக்கவோ, அல்லது வேறு எவ்வித சாதனம் செய்யவோ எனக்கு முழு பூரண உரித்தும் தத்துவமும் உண்டென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றேன்.
மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.பிரணவன் அவர்களால் 14.05.2024 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2159 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 5 குளி 8.98ம் அதற்குரியவைகளும் இதற்கெல்லைகளாக

கிழக்கு:- செல்லையா இரத்தினசிங்கத்தின் ஆதனமும்,
வடக்கு:- செல்லத்துரை செல்வராசா பெண் செல்வராணியின் ஆதனமும்
தெற்கு:- ஜோன் கெனடியின் ஆதனமும் கிணறும்
மேற்கு:- ஒழுங்கையும் ஜோன் கெனடியின் ஆதனமும் இதடங்கலும் இதனைச் சேரந்தவைகளும்
எனவே மேற்குறித்த ஆதனத்தினை விக்கினேஸ்வரன் நகுலேஸ்வரன் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.
எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது விக்கினேஸ்வரன் நகுலேஸ்வரன். எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி சாரதா உருத்திரசாம்பவன்
செயலாளர்
வலிகாமம் தெற்குபிரதேச சபை
சுன்னாகம்.
2024.09.06

(CS/56348) J-1

# எரிவாயு விலை மாற்றமில்லை

கொழும்பு, ஒக். 2
ஒக்ரோபர் மாதத்துக்கான எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது. சர்வதேச சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும் உள்நாட்டு எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-66)

# சிறுவர் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 2
ஊறணி கனிஷ்ட வித்தியாலயத்தின் பாடசாலை மட்டச் சிறுவர் தின நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் பா.செந்தூரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
குறித்த நிகழ்வில் வலிகாமம் வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் தி.உதயகுமார், ஊறணி அந்தோனியார் ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி செ.ம.சுதர்சன், நலன்விரும்பி செ.ஈஸ்வரபாலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஒ-66)

# இந்து சமயப் பேரவையில் தொடர் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 2
இந்து சமயப் பேரவையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் திருட்டுகளை பொலிஸார் தடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் இயங்கி வரும் இந்துசமயப் பேரவைக்குள் கடந்த மாதம் 26ஆம் திகதி அதிகாலை உள்நுழைந்து 40 வயதான நபரொருவன் ஒருதொகைப் பணத்தைத் திருடியுள்ளதுடன், அதன்பின்னரும் இந்துசமயப் பேரவை வளாகத்தில் தொடர்ச்சியாகத் திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளான்.
இந்நிலையில் இதுதொடர்பாக உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதுடன் திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பிலும் உரிய தகவல்கள் வழங்கிய போதிலும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என இந்துசமயப் பேரவையின் தலைவர் சிவசக்திகிரீவன் குற்றம் சாட்டியுள்ளார்.
இதனையடுத்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை திருட்டில் ஈடுபட்ட நபரை அடையாளம் காட்டிய போதிலும் பொலிஸ் தரப்பால் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டி இந்துசமயப் பேரவையின் தலைவர் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார். இதுதொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக யாழ்.மாவட்டப் பதில் செயலர் தம்மிடம் தெரிவித்ததாக இந்துசமயப் பேரவையின் தலைவர் தெரிவித்தார். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

## கேள்வி அறிவித்தல் - 2025.

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2025 இலிருந்து 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக் கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 02.10.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 15.10.2024 பிற்பகல் 14.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 15.10.2024 பி.ப 02.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி :- 15.10.2024 பி.ப 02.00 மணி வரை

| இல | குத்தகைவகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VATநீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **புதுக்குடியிருப்பு உப அலுவலகம்** | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 351,000.00 | 7,018,550.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 132,000.00 | 2,640,000.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 88,000.00 | 1,760,000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 19,000.00 | 376,090.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 18,000.00 | 369,600.00 |
| 6 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 2,500.00 | 51,700.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 91,500.00 | 1,831,500.00 |
| 8 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 60,500.00 | 1,210,000.00 |
| 9 | விசுவமடு பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 54,000.00 | 1,075,554.70 |
| 10 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 49,500.00 | 990,000.00 |
| 11 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை (இல-01) | 2,000.00 | 2000.00 | 36,300.00 |
| 12 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை (இல-02) | 2,000.00 | 2000.00 | 27,500.00 |
| 13 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 8000.00 | 154,000.00 |
| 14 | கைவேலி மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 52,000.00 | 1,045,000.00 |
| 15 | கைவேலி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 38,500.00 | 700,000.00 |
| 16 | கைவேலி பன்றி இறைச்சிக்கடை (வளர்ப்புப் பன்றி) | 2,000.00 | 22,000.00 | 400,000.00 |
| | **ஒட்டுசுட்டான் உப அலுவலகம்** | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 3,000.00 | 60,611.10 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,500.00 | 53,130.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,500.00 | 46,750.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 28,000.00 | 561,000.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 20,000.00 | 396,550.00 |
| 6 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 28,000.00 | 562,100.00 |
| 7 | கற்சிலைமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 6000.00 | 114,400.00 |
| 8 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை (இல-01) | 2,000.00 | 2,000.00 | 2,530.00 |
| | **ஒலுமடு உப அலுவலகம்** | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | 2,000.00 | 4,000.00 | 77,000.00 |
| 2 | மாங்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 9,500.00 | 192,060.00 |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | 2,000.00 | 15,000.00 | 303,600.00 |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 2,000.00 | 31,350.00 |

**நிபந்தனைகள் :**

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர்.பிராந்திய பெறுகைக் குழு.புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2024.10.22 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சம பங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலை நாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி. தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக் கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
5. பொதுச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் நடை பாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றல் வேண்டும்.
6. பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடமுடியாது. மீன், மரக் கறிச்சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு.விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு ஒருநாளிற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இட வாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00ம் மோட்டார் சைக்கிள் .முச்சக்கரவண்டிகள்.ஒவ்வொன்றிற்கும் ரூபா 20.00ம் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு 50.00ம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
7. புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00ற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00ற்கு மேற்படாமலும், விசுவமடு சந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00ற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.
8. பொதுச் சந்தையில் மரக்கறி.கடலுணவு வகைகளின் கொள்விலை.விற்பனை விலை என்பன காட்சிப்படுத்தல் வேண்டும்.
9. மரக்கறி.கடலுணவு மற்றும் இறைச்சிக்கடைகளில் அவற்றின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் வேண்டும்.
10. கடலுணவு. இறைச்சிவகைகள் விற்பனையில் ஈடுபடுவோர் குறித்த ஆண்டிக்கான மருத்துவ அறிக்கையை தன் வசம் வைத்திருத்தல் வேண்டும்.
11. திருமுறிகண்டி பொது மலசல கூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரியோ அல்லது கட்டணமோ அறவிடக் கூடாது. (கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.)
12. மலசலகூடங்களில் ஏற்படுகின்ற சிறிய திருத்த வேலைகளை குத்தகைக்கு எடுப்பவரே சீர் செய்தல் வேண்டும்.
13. மலசலகூடத்தினை குத்தகைக்கு பெறுபவர் மலசலகூடத்திற்கான மின்சார கட்டண வைப்புப்பணமாக ரூபா 10.000.00 அறவிடல் வேண்டும்.
14. திருமுறிகண்டி கழிப்பறையினை குத்தகைக்கு எடுப்பவர் ஒவ்வொரு வேளையும் தூய்மையாகவும் செம்மையாகவும் வைத்திருக்க வேண்டும் அத்துடன் போதிய மின்சார வசதிகள் ஏற்படுத்தி இருக்கவேண்டும்.
15. இறைச்சிக் கடைகளின் வெளிப்புறம். உட்புறம் தூய்மையாக பேணப்பட வேண்டும்.
16. இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்றவேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு. ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
17. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி. சுற்று நிருபங்களுக்கு அமைவாகவும். சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவும் விற்பனை செய்தல் வேண்டும்.
18. இறைச்சிக் கடைகள் மற்றும் கருவாட்டு கடைகளினை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
19. கோழி இறைச்சிக்கடை குத்தகைக்காரர்கள் கோழிகளினை உயிருடன் காட்சிப்படுத்தி விற்பனை செய்தல் வேண்டும்.
20. கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்படவேண்டும்.
21. சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு சந்தைக் குத்தகையாளர் எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.
22. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
23. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண்.பெண் மாடுகள், எருமை மாடுகள். ஆடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகள். ஆடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
24. சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும் பொதுவிதிகள் தவிர்ந்த விசேட சலுகைகள் சபை தீர்மானத்திற்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்படும். தாங்கள் சட்ட வரையறைகளுக்கும் சபைக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.
25. அரசினாலும் .பிரதேசசபையினாலும் தொற்று நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
26. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.


**தலைவர்.**
**பிராந்தியபெறுகைக் குழு.**
**புதுக்குடியிருப்புபிரதேசசபை.**
**புதுக்குடியிருப்பு.**
**2024.10.02**

(CR/43324) J-1


# லிட்ரோ தலைவராக சன்ன குணவர்த்தன

கொழும்பு, ஒக். 2

லிட்ரோ எரிவாயு நிறுவனம் மற்றும் லிட்ரோ எரிவாயு டர்மினல் லங்கா நிறுவனத்தின் தலைவராக சன்ன குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். புதிய ஜனாதிபதியின் நியமனத்தை கருத்திற்கொண்டு லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து புதிய தலைவராக சன்ன குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ச-சி)




# வாசிப்பு மாதப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.2

வலி கிழக்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் முன்பள்ளி சிறார்களுக்கான 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' என்ற தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள் நீர்வேலி பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முன்பள்ளி சிறார்களுக் கான அபிநயப்பாடல், மனனம்,மற்றும் பேச்சுப் போட்டி என்பன நடத்தப்பட்டன.

(ச-25.9)



இலங்கை தேசிய சமாதானப் பேரவையால் நடத்தப்பட்ட ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் தொடர்பிலான பயிற்சிநெறியானது யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இலங்கைத் தேசிய சமாதான பேரவையினர், சொண்ட் நிறுவனத்தின் பணியாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், சமுகமட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (45-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய....

இது தொடர்பில் யாழ்ப்பாண மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாம் ஓர் இனமாக வரலாற்றுப் பெரும் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய தருணத்தில் நிற்கிறோம். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னணியில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல், தமிழ் மக்கள் மத்தியில் பெருமாற்றத்துக்கான எதிர்பார்ப்புகளைத் தூண்டியிருக்கின்றன.

சமகால அரசியற்கட்சிகளின் உடைவுப் போக்குகள், உட்கட்சிக் குழப்பங்கள் தீர்க்கமான அரசியல் தெளிவற்றதன்மை போன்ற பல காரணிகளால் தமிழ் மக்களிடையே குழப்பங்களும் மனவேதனையும் நீடிக்கின்றன. இந்த நிலை தொடருமானால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான அளவு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தக்க வைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

'அநுர' எனும் அலையைத் தொடர்ந்து 'மாற்றம்' என்பது மந்திரச்சொல்லாக பலராலும் உச்சரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இந்த வரலாற்றுத் திருப்புமுனையில் நின்று கொண்டு புதிய வியூகங்களை வகுக்க வேண்டியது எமது தார்மீக வரலாற்றுக் கடமையாக உள்ளது. வரலாற்றுச் சறுக்கலை மீண்டும் ஒருமுறை நிகழவிடாது எமது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளைத் தீர்மானிக்கவேண்டும். எம்மிடையே இருக்கும் பிளவுகள், வேற்றுமைகள், சாதி, சமய, பிரதேசவாதங்களைத் தாண்டி நகரவேண்டிய இடத்தில் வரலாறு எம்மைத்தற்போது நிறுத்தியுள்ளது.

குறிப்பாக பாரம்பரிய அரசியல் பிரதிநிதிகள் புதிய அரசியல் போக்குக்கு இடம் விட்டு நகர்ந்து அர்ப்பணிப்புள்ள நேர்மையான ஊழலற்ற இளையோர்களை உள்வாங்கி வழிநடத்துவது பெரும் மாற்றம்ஒன்றிற்கான சிறந்த முன்மொழிவாக இருக்கும். மைய்யரோட்டு அரசியலைத் தாண்டி கிராமமட்ட சமூக அமைப்புகளின் கருத்துகளை உள்வாங்கி வேட்பாளர்களைத் தெரிந்தெடுப்பது மிகச்சிறந்த நகர்வாக இருக்குமென்பதுடன், பால் நிலை சமத்துவம், பெண் பிரதிநிதித்துவம் குறித்தும் கருத்தில் எடுக்கவேண்டியதும் அவசியமாகும்.

செல்திசை தெரியாது தடுமாறும் அவல நிலையில் உள்ள தமிழ் இனத்துக்குச் சரியான திசைகளைக் காட்டுவது எமது வரலாற்றுக் கடமையென்பதை உணர்ந்து கொள்ளுவோம்.

தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் எமதுநாடாளுமன்றப்பிரதிநிதித்துவத்தை இழந்துபோகக்கூடிய ஆபத்து அண்மித்துள்ள இவ்வேளையில் ஊழலற்ற நேர்மையான அரசியல் போக்குக் குறித்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு 'புதிய மாற்றத்தை' வேண்டி நிற்கின்றது.

நேர்மையான அரசியல் தெளிவு மிக்க ஒரு புதிய அரசியல் நகர்வை மேற்கொண்டு ஒரு தேசிய இனமாக எழுந்து நின்றால் மட்டுமே தமிழினம் தன் இருப்பின் உரிமைகளுக்கான பேரம் பேசும் சக்தியாக எழுந்து நிற்க முடியும் - என்றுள்ளது. (அ-ம)

## தேசிய...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிறீதரன் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது, புதிய ஜனாதிபதிக்கு சிறீதரன் வாழ்த்துத் தெரிவித்ததோடு, கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளார். அந்தக் கடிதத்திலேயே சிறீதரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:- தங்களின் ஆட்சி, அதிகாரங்களின் மீது இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பைப் போலவே, இலங்கைத் தீவின் சுதேசிய இனத்தவர்களான தமிழர்களும், தமது அடிப்படை உரித்துகள் மீதான சாதக நகர்வுகள் தங்கள் ஆட்சிக்காலத்திலேனும் ஈடேறும் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள் என்ற செய்தியை, அந்த மக்களின் பிரதிநிதியாக தங்களிடத்தே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

கடந்த ஏழரை தசாப்த காலமாக இந்த நாட்டில், ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ள நேர்ந்த இனவன்முறைப் பாதிப்புகள், அவற்றுக்கு நீதிகோரி மூன்று தசாப்தங்களாக நிகழ்ந்தேறிய போரின் விளைவுகள், போர் மௌனிக்கப்பட்ட பின்னரும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் வலிந்து மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத, மொழி மற்றும் கலாசாரப் படுகொலைகள், கைதுகள், காணாமலாக்கல்கள் உள்ளிட்ட துயரச் சம்பவங்கள் தினம்தினம் அரங்கேற்றப்பட்டு வருவதை அறிந்திருப்பதைப் போலவே, தங்கள் ஆட்சியில் அத்தகைய துயர வரலாறுகள் இடம்பெறாதிருக்கும் என்ற எமது மக்களின் ஏகோபித்த நம்பிக்கையையும் தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

அந்தவகையில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நீதி, மீள நிகழாமையை உறுதிசெய்தல், தமிழரசியற்கைதிகளின் விடுதலை, மதத்தின் பெயரால் நடைபெறும் நிலப்பறிப்புகள் உள்ளிட்ட விடயங்களில் தங்களின் துரிதமானதும், சாதகமானதுமான நகர்வுகளையும், நடவடிக்கைகளையும் கோரி நிற்கிறேன்.

சமநேரத்தில், போர்க்காலச் சூழலில் இனத்திற்காகப் போராடி மடிந்த தமது புதல்வர்களை நினைவேந்தும் உரிமை கூட மறுக்கப்பட்ட இந்தத் தேசத்தில், போரியல் இயக்கம் ஒன்றின் வழிவந்த ஒருவராக எமது மக்களின் அக உணர்வுகளையும், அதிலுள்ள நியாயாதிக்கங்களையும் உணர்ந்து செயற்படும் மக்கள் தலைவராக, நாட்டின் நல்லிணக்கத்திற்கு துளியேனும் பாதிப்பை ஏற்படுத்தாத, உணர்வுநிலைப்பட்ட நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கு, எமது மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரித்தை உறுதிசெய்ய வேண்டுமென்றும் தங்களைத் தயவோடு கோரிநிற்கிறேன்.

அதற்கமைய, ஈழத்தமிழர்களின் அடிப்படை எதிர்பார்ப்புகளையும், அபிலாஷைகளையும் உணர்ந்தும், ஏற்றும் செயற்படத்தக்க அரசியற் கூருணர்வும், சகோதரத்துவமும் மிக்க தங்களின் ஆட்சிக்காலம், இலங்கைத் தீவின் துயர வரலாறுகளை மீள நிகழ்த்தாத காலமாக, தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு நோக்கிய வரலாற்றின் திருப்பங்கள் நிகழும் காலமாக அமையவேண்டுமெனக் கோருவதோடு, அத்தகைய நகர்வுகள் சார்ந்த தங்களின் பயணத்தில் எமது பரிபூரண ஒத்துழைப்பு உங்களோடு இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (அ-ஒ-26-20)

## வினாத்தாள்...

போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் சில வினாக்கள் வெளியில் கசிந்த விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையாகி வருகின்றது. இதையடுத்து, ஜனாதிபதி அலுவலகத்தின் முன்பாகவும் கல்வி அமைச்சுக்கு முன்பாகவும் மாணவர்களின் பெற்றோரால் நேற்றுமுன்தினம் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்தே, தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுப்பணியை உடனடியாக நிறுத்தி, முறையான விசாரணைகளை மேற்கொள்வதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோரை அழைத்து நடத்திய பேச்சுகளின்போதே அவர் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். (அ-ம-சி)

## ஜெய்சங்கர்...

களில் இருந்து அறியமுடிகின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் புதிய அரசு அமைந்துள்ள நிலையில், நாட்டுக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரியாக இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அறியப்படுகின்றார். இந்தியாவுக்கு வருமாறு இந்தியப் பிரதமர் மோடியின் அழைப்பை, ஜனாதிபதி அநுரவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கையளிக்கவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

அதேவேளை, தமிழ்க் கட்சிகளுடனும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## இனப்...

சமீபத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியாக அநுர தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வாகத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முன்வைத்திருந்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தற்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதிய நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டதும் நிச்சயம் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். அது மக்களின் வாக்கெடுப்புடன்தான் நிறைவேற்றப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## காணாமலாக்...

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்துக்குப் பலம் சேர்க்கும் வகையில் பொதுமக்களும் பெருமளவில் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர்.

இலங்கையில் சிறுவர்களின் நலன்களைப் பேணும் எத்தனையோ அமைப்புகள் உள்ளன. ஆனால், எந்தவொரு அமைப்பும் காணாமலாக்கப்பட்ட எங்களின் பிள்ளைகளுக்கான நீதியை நிலைநாட்டவில்லை. அதற்கான பொறிமுறையையேனும் அவை ஏற்படுத்தித் தரவில்லை. எமக்கான நீதி கிடைக்கும் வரை நாம் போராடுவோம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்ற பின்னர், காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி இடம்பெறும் பெரியளவிலான கவனவீர்ப்பு இதுவாகும். அதனால் இந்தப் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110-20-113)

## மக்கள்...

உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.ரி. சித்திரசிறி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் ஓய்வுபெற்ற அமைச்சின் செயலர் டி.திஸாநாயக்க, ஓய்வுபெற்ற மாவட்டச்செயலர் ஜயந்த புலுமுள்ள ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வருடாந்தம் பெருமளவு வரிப்பணம் மேற்படி கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டை எவ்வளவு குறைக்கலாம் என்பது பற்றி உரிய வழி வகைகள் மூலம் ஆராய்ந்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-சி-6)

## பழைய...

வவுனியா - கண்டிவீதியில் அமைந்துள்ள பழைய பேருந்துநிலையமே கடந்த 2017ஆம் ஆண்டுவரை வவுனியாவின் பிரதான அரச பேருந்து நிலையமாகச் செயற்பட்டுவந்தது.

இந்த நிலையில் வவுனியா யாழ். வீதியில் அனைத்து வசதிகளுடனும் கூடிய புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டதுடன், கடந்த 2017ஆம் ஆண்டு முதல் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையமூடாகவே அரச, தனியார் பேருந்துகள் சீரானமுறையில் சேவையை முன்னெடுத்து வருகின்றன. இந்த நிலையில் பழையபேருந்து நிலையப்பகுதியில் பயன்பாடற்று காணப்பட்ட பழமையானதரிப்பிடக் கட்டடங்கள் நகரசபையால் அகற்றப்பட்டு வருகின்றன. அந்த இடத்தில் வாகனத்தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக நகரசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-ச-110)

## காற்றாலை...

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு பொது மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கான கடிதங்கள் நேற்று மாலை முறைப்படி அனுப்பப்பட்டுள்ளன. இந்தக் காற்றாலைகளால் தமது சூழல் சிதைவுறுவதோடு, இயற்கைப் பேரிடரையும் எதிர்கொள்ள வேண்டிவரலாம் என்ற அச்சம் காரணமாக மன்னார் மக்கள் நீண்டகாலமாக இந்தத் திட்டத்துக்கு எதிராகப் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-56)

## மதுபான...

திணைக்களம் தெரிவித்துள்ளது. மதுபானம் அருந்துவதால் உலகளாவிய ரீதியில் வருடத்துக்கு மூன்று மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழப்பதுடன் இலங்கையில் நாளொன்றுக்கு 50 பேர் வரை மரணிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றைக் கருத்திற் கொண்டு உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவேண்டும் என்று விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாட்டுத் தூதரகப் பணிகளில் அரசியல்வாதிகளின் உறவினர்கள்?

## நடவடிக்கை எடுக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் பணிப்பு

**கொழும்பு, ஒக்.2**

**வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவையாற்றும் அரசியல்வாதிகளின் உறவினர்கள் தொடர்பான தகவல்களை தனக்கு வழங்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பணிப்புரை விடுத்துள்ளார்.**

இது தொடர்பான அறிக்கை கிடைத்த பின்னர் அவர்களை மீள அழைப்பது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கை இடம்பெறும் எனவும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது அரசியல் சிபாரிசின் அடிப்படையில் இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகங்களில் எமது நாட்டு அரசியல்வாதிகளின் பிள்ளைகள், உறவினர்கள மற்றும் அரசியல் வாதிகளுக்கு நெருக்கமானவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அது தொடர்பில் முழுமையானதொரு அறிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளேன். அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் உடனடியாக மீள அழைக்கப்படமாட்டார்கள். ஏனெனில் சில சர்வதேச மாநாடுகள் நடைபெறுகின்றன. உதாரணமாக தற்போது ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடர் நடைபெறுகின்றது. இப்படியான சூழ்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

(ச-44-சி)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 48 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

**பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தொடர்புகளுக்கு:

**077 030 2523**

(CS 29025) V-1

# காட்டிக்கொடுத்தோருக்கு வாய்ப்புகள் கிடைக்காது!

## பெரமுன திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 2

கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டுச் சென்ற எவருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரிய வசம் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழ நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியைக் காட்டிக்கொடுத்த எவரும் மீண்டும் கட்சிக்கு வரமுடியாது. மக்களுக்கு வேண்டாம் என்றால் சலூன் கதவை பூட்டுவதற்குத் தயார் என மஹிந்தவும் அறிவித்துவிட்டார். எனவே, அவர்களுக்கு வேட்பு மனு வழங்கப்படமாட்டாது. மொட்டுக் கட்சிக்கு தற்காலிக பின்னடைவே ஏற்பட்டுள்ளது. நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை உள்ளது-என்றார்.

(எ-44)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
08 • 06 • 1940

மறைவு
03 • 09 • 2024



## செல்லப்பா தங்கராஜா

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)**

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல், வட்சப், கண்ணீர் அஞ்சலி மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**“அமுத சுரபி”
கைதடி கிழக்கு
கைதடி.**

**குடும்பத்தினர்.
077 268 1949
077 598 8782**

(CS/29016) J-1

# பரீட்சைப் பெறுபேறுகளை பொதுவெளியில் பதிவிடாதீர்

கொழும்பு, ஒக். 2

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பதிவிடும்போது அவதானமாக இருக்க வேண்டும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. பெறு

பேறுத் தாளில் உள்ள பிள்ளைகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பெயர் ஆகியவற்றை சமூகவலைத்தளங்களில் இடுவதைத் தவிர்க்கவேண்டும் தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முழுப் பெயரையும் பகிரங்கப்படுத்துவதன் மூலம், இணையத்தில் உலாவும் ஹேக்கர்கள் அந்தத் தகவலை எளிதாகப் பெற்று பல்வேறு தவறான செயல்களில் ஈடுபட முடியும். மாணவர்களின் வங்கிக் கணக்குகளை ஹேக்கர்கள் அணுகி நிதி மோசடியில் ஈடுபடலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ச)

# நவராத்திரி பூசை வழிபாடு நாளை

யாழ்ப்பாணம், ஒக். 2

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நவராத்திரி பூசைகள் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை விஜயதசமி தினத்தன்று பிற்பகல் ஒரு மணிக்கு பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி மாலை 3.30 மணிக்கு கண்ணகியம்மன் வட்டு. மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள இலுப்பையடி ஞானவைரவர் ஆலயத்துக்கு எழுந்தருளி வன்னி வாழை வெட்டுவதற்காக தெருவீதி உலா வருவார்.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு கேதார கௌரி விரதப் பூசைகள் ஆரம்பமாகி இடம்பெறும்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.